மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியைச் சார்ந்தவர்தான். அவரும் ஒரு கல்லூரியை கூட்டுறவுத் துறையின் மூலமாக துவக்குவதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். அதை அங்குதான் துவக்கப் போகிறார். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று அங்கு கல்லூரியை உருவாக்கித் தருமாறு நான் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். காலம் வருகின்றபோது நிச்சயமாக அரசு அதற்கான பரிசீலனைகளைச் செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

6—

சாலை விரிவாக்கம்

***7038—திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செங்கோடு தொகுதி, திருச்செங்கோடு ஒன்றியத்திற்குட்பட்ட சேலம் கோழிக்கால்நத்தம்–வடுகப்பட்டி–வைகுந்தம் சாலையை விரிவாக்கம் செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் ஒன்று சட்டமன்றம். சட்டமன்றத்தில் உள்ள அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அத்துணை பேரும் தங்களது தொகுதி மக்களுக்காக, நாட்டு மக்களுக்காகப் பணியாற்றுகின்றோம். ஆக, அப்படிப்பட்ட நிகழ்வுகளை இன்றைக்கு உலகமே அறிகின்ற அளவுக்கு, நேரடி ஒளிபரப்புமூலம் நாட்டிற்கு பறைசாற்றியிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாகவும், அமைச்சர் பெருமக்களின் சார்பாகவும் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

2022 ஜனவரி 6]

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள் திருச்செங்கோடு தொகுதி பற்றி கேள்வி கேட்டிருக்கிறார். சேலம் கோழிக்கால்நத்தம்–வடுகப்பட்டி–வைகுந்தம் சாலையை விரிவாக்கம் செய்திட வேண்டுமென்று ஒரு கேள்வியை எழுப்பியுள்ளார்கள். சேலம்–கொச்சின் சாலையில் உள்ள ஊர் வைகுந்தம். அந்த வைகுந்தத்திலிருந்து கோழிக்கால்நத்தம் வரை செல்கின்ற சாலை 11.20 கி.மீ. ஆகும். இந்த மாவட்ட இதர சாலை (ODR) தற்போது ஒருவழித் தடமாக இருக்கிறது. அந்தச் சாலை, 12 அடி அதாவது 3.66 மீட்டர் அகலமுடையது. இந்தச் சாலையில் முதல் 7.80 கி.மீ. சேலம் மாவட்டத்தைச் சார்ந்தது. 7.80 கி.மீ. முதல் 11.20 கி.மீ. வரை நாமக்கல் மாவட்டத்தைச் சார்ந்தது. ஆக, இந்தச் சாலை இரண்டு வருவாய் மாவட்டங்களைச் சார்ந்தது. எனவே, இந்தாண்டு அந்த 12 அடி சாலை என்பதை 18 அடி சாலையாக மாற்றுவதற்காக 8 கோடி ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டு, 2022–2023 ஆம் நிதியாண்டில் CRIDP திட்டத்தின்கீழ், அந்தச் சாலையை விரிவுபடுத்துவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் என்னுடைய ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சாலை, கோழிக்கால் நத்தத்திலிருந்து சேலம்–கொச்சின் தேசிய நெடுஞ்சாலையை இணைக்கின்ற சாலை. இந்தச் சாலையில் இரண்டு இரயில்வே gate–கள் இருக்கின்றன. அதில் underpass போடப்பட்டுள்ளன. காஞ்சாம்புதூர் என்ற இடத்திற்கும், வடுகப்பட்டிக்கும் இடையில் ஒரு Railway underpass–ம், வைகுந்தத்திலிருந்து ஒரு கிலோ மீட்டருக்கு உள்ளாக மேட்டுக்காடு என்ற இடத்திலே ஒரு underpass–ம் போடப்பட்டிருக்கிறது. மேட்டுக்காடு என்ற இடத்திலே ஆறு மாதங்களுக்கு முன்பே underpass முடிக்கப்பட்டு, திறக்கப்படாமலேயே இருக்கிறது. அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிந்து, அதைத் திறந்து வைக்க வேண்டும். இது ஏதோ திருச்செங்கோடு தொகுதிக்குட்பட்ட கோழிக்கால்நத்தம்–வைகுந்தத்தை இணைக்கின்ற சாலை மட்டுமல்ல; திருச்செங்கோடு ஒன்றியம் மற்றும் மல்லசமுத்திரம்

ஒன்றியம், நாமக்கல் பகுதியிலிருந்து சேலம்–கொச்சின் தேசிய நெடுஞ்சாலையை இணைக்கின்ற சாலையாகவும் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு என்ன வேண்டுமென்ற கேள்விக்கு வந்துவிடுங்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: இந்தச் சாலை அந்தப் பகுதியில் இருக்கின்ற அனைத்து மக்களுக்கும் பயன்படக்கூடிய சாலை. ஆகவே, அதைத் தாமதப்படுத்தாமல், இருவழிச் சாலையாக உடனடியாக மாற்றித் தர வேண்டுமென்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் செய்து தருவோம் என்று சொன்னதற்கும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு – சேலம் கோழிக்கால்நத்தம் – வடுகப்பட்டி – வைகுந்தம் சாலையானது, நான் முதலிலேயே குறிப்பிட்டதுபோல், இரண்டு வருவாய் மாவட்டங்களை இணைக்கின்ற சாலையாகும். இதுபோன்று தமிழ்நாட்டில் ஒருவழிச் சாலைகள் நிறைய இருக்கின்றன. பல்வேறு தொகுதிகளில், பல மாவட்டங்களில் இருக்கின்றன என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிந்த காரணத்தினால்தான், இந்த ஆண்டு ஒருவழிச்சாலைகள் எல்லாம் இரண்டு வழிச்சாலைகளாக மாற்றப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'சாலை மேம்பாட்டுத் திட்டம்' என்கிற திட்டத்தின்கீழ், ஒருவழிச் சாலைகளையெல்லாம் இருவழிச் சாலைகளாக மாற்றவேண்டும் என்று முடிவு செய்து, அது இறுதி செய்யப்பட்டு, இந்த ஆண்டு 600 கிலோ மீட்டர் சாலையை திட்ட மதிப்பீட்டில் எடுத்திருக்கிறோம். அதில்தான் இந்தச் சாலையும் வருகிறது; கட்டாயம் செய்து முடிப்போம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

2022 ஜனவரி 6]

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லிவிட்டு உட்காருங்கள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவிக்கும்வேளையில் சுருக்கமாக ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். திருச்செங்கோடு வாலறை கேட்டிலிருந்து லக்காபுரம் வரை உள்ள சாலையை அகலப்படுத்தியாக வேண்டும்; போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது. அதேபோல, திருச்செங்கோட்டிலிருந்து சேலம் செல்கின்ற அரியானூர் வரை இருக்கின்ற சாலையினை, தேசிய நெடுஞ்சாலைத் துறை வசம் ஒப்படைத்துள்ளதாக மாநில நெடுஞ்சாலைத் துறையினர் சொல்கிறார்கள். ஆனால், தேசிய நெடுஞ்சாலைத் துறையினரிடம் கேட்டால், இன்னும் சரியான முறையில் ஒப்படைக்கவில்லை என்று சொல்கிறார்கள். அதையும் அகலப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. இந்தப் பிரச்சினையைத் தீர்த்து, அதையும் செய்து திருச்செங்கோடு மக்களுக்கு இந்த வேலைகளைச் செய்துதர வேண்டுமென்று மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்களை மீண்டும் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோட்டைப் பொறுத்தளவில், தமிழக அரசின் சார்பாக பல்வேறு பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. புறவழிச் சாலை தொடர்பாக ஏற்கெனவே கேள்விகள் கேட்கப்பட்டு, அதற்கு நிலயெடுப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்பொழுது இரண்டு கோரிக்கைகளை நீங்கள் வைத்திருக்கிறீர்கள். அவற்றையெல்லாம் நீங்கள் கடிதம் வாயிலாகத் தந்தால் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களை அழைத்துப்பேசி அதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா அவர்கள்.*

திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். ஆட்சிக்கு வந்த சில மாதங்களில் வேளச்சேரி*

பாலத்தைக் கட்டி முடித்து அதன் ஒரு பகுதியைத் திறந்து வைத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வேளச்சேரி பாலத்தின் ஒரு பகுதி திறக்கப்பட்டுள்ளது. அது one way ஆக இருக்கிறது. போக்குவரத்து மிகவும் குறைவாக, கிட்டத்தட்ட Traffic இல்லாத அளவில் இருக்கிறது. அதை இருவழிப் பாலமாக மாற்றித்தர வேண்டும் என்பது எனது முதல் வேண்டுகோள். அதேபோல தரமணி சந்திப்பிலிருந்து அடையாறு வழியாக திருவான்மியூர் வரை செல்லும் பாலம். அந்தப் பாலத்தில் அடையாறு junction–ல் அதிகமான போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. அந்த junction–ல் அந்தப் பாலத்தை இணைக்கும் வகையில் இன்னொரு பாலம் அமைக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரி பாலத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே அதனை விரைந்து செயல்படுத்த வேண்டுமென்று நானே இரண்டு முறை அங்கே சென்று ஆய்வுசெய்து அந்தப் பணிகள் நடைபெற்று, அதன் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டது. அவர் இரண்டாவது கோரிக்கையினைச் சொல்லியிருக்கிறார். இது சம்பந்தமான ஆய்வினை மேற்கொண்டு, அதற்கு சாத்தியக்கூறுகள் உண்டென்று சொன்னால், அது கட்டாயம் நடைபெறும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு ஒன்றியத்திற்குட்பட்ட சேலம்–கோழிக்கால்நத்தம்–வடுகப்பட்டி வழியாக வைகுந்தத்திற்கு சாலை அமைக்க வேண்டுமென்று, இங்கே உறுப்பினர்கள் கேள்வி கேட்டு, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பதில் சொல்லியிருக்கிறார்கள். முதலில் வைகுந்தத்திற்கு சாலை

2022 ஜனவரி 6]

அமைக்க வேண்டுமென்றால், கிருஷ்ண பரமாத்மாவிடம் அனுமதி பெறவேண்டும்; அவர்களிடம் அனுமதியை வாங்கியிருக்கிறீர்களா என்ற கேள்விக்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பதில் கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில் இன்றைக்கு மக்களுடைய தேவைகளை அறிந்து, ஆங்காங்கே சாலைகளைப் போடவேண்டும் என்பதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இந்தாண்டு ஏறத்தாழ 17 ஆயிரம் கோடி ரூபாய்க்கு பணம் ஒதுக்கப்பட்டு, ஆங்காங்கே சாலைப் பணிகள் நடைபெறுகின்றன. ஆன்மிகத்தில் திளைத்திருக்கிற நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அண்ணன் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், வைகுந்தத்திற்கு அனுமதிக்கப்படுமா என்று கேள்வி கேட்கிறார்கள். இந்த ஆட்சியைப் பொறுத்தளவிற்கு, இன்றைக்கு ஆன்மிகத் துறைக்கு நியமிக்கப்பட்டுள்ள நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. சேகர்பாபு அவர்கள் மூலமாக ஐந்தரை மணிக்கே வைகுந்தத்திற்கு வழிகாட்டுகின்ற அளவிற்கு, அறநிலையத் துறையின் மூலமாக பல பணிகள் மாநிலத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. எனவே அறநிலையப் பணிகள் என்பதைப் பார்க்கிறபோது, எப்பொழுதும் இல்லாத அளவிற்கு நம்முடைய அண்ணன் தளபதியார் அவர்கள் ஆட்சியிலே, ஆன்மிக மக்கள் என்னென்ன விரும்புகிறார்களோ, அவை பார்த்துப்பார்த்து செய்யப்படுகின்றன. அது சிவலோகத்திற்குப் போவதாக இருந்தாலும் சரி, வைகுந்தத்திற்கு போவதாக இருந்தாலும்சரி, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. சேகர்பாபு அவர்கள் அதற்கு வழிகாட்டுகின்ற பணிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். எனவே, அதையே அவருக்குப் பதிலாகச் சொல்ல விரும்புகிறேன்.*

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*